5. கவன ஈர்ப்பு

அனுமதி பெறாமல் பெருகிவரும் வீட்டுமனைகள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், திரு. ஜே.ஜி. பிரின்ஸ், டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோரில் ஒருவர், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் புற்றீசல் போல பெருகிவரும் அனுமதி பெறாத வீட்டுமனை விற்பனை" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

ஒப்புதல் பெறாத மனைப் பிரிவுகளில் மனைகளை வாங்குவதால் அப்பாவி பொது மக்களுக்கு ஏற்படும் துன்பங்களைக் களைவதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில், ஊராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள ஒப்புதல் அளிக்கப்படாத மனைகளை வரன்முறைப்படுத்துவதற்கான திட்டம் தமிழக அரசால் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் எனும் மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் 2012–2013 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது அளித்த அறிவிப்பைத் தொடர்ந்து, அனுமதியற்ற மனைப் பிரிவுகளை முறைப்படுத்துவதற்கான கருத்துரு பெறப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது. இக்கருத்துரு குறித்து ஆணையர், நகராட்சி நிருவாகம் மற்றும் ஆணையர், ஊரக வளர்ச்சித்

2013 ஏப்ரல் 10] [திரு. ஆர். வைத்திலிங்கம்]

துறை ஆகியோருடன் கலந்தாலோசித்து, ஊரகப் பகுதி, நகராட்சி, மாநகராட்சி முதலிய பகுதிகளில் உள்ள அனுமதிபெறாத மனைப் பிரிவுகளை வரன்முறைப்படுத்த ஒரே மாதிரியான விதிமுறைகளைக் கொண்ட ஒருங்கிணைந்த திட்டமாகக் கொண்டு வரலாம் என இத்துறை கருதுகிறது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும எல்லைக்குள் 31–12–1989–க்கு முன்னதாக ஏற்படுத்தப்பட்ட அனுமதியற்ற மனைப் பிரிவை வரன்முறைப்படுத்திட சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி மற்றும் பேரூராட்சி எல்லைகளுக்குள் 31–12–2007–க்கு முன்னதாக ஏற்படுத்தப்பட்ட அனுமதியற்ற மனைப் பிரிவை வரன்முறைப்படுத்திட நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ஆணை வெளியிட்டுள்ளது. ஊராட்சிகளைப் பொறுத்தமட்டில், இதுகுறித்து ஆணை எதுவும் வெளியிடவில்லை. எனவே, இதுகுறித்து ஒட்டுமொத்தமாக அனைத்துப் பகுதிகளுக்கும் சேர்த்து பொதுவான ஆணை வெளியிடலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், பத்திரப் பதிவுத் துறை சட்டம் பிரிவு 22–A– ல் அனுமதியற்ற மனைப் பிரிவுகளில் உள்ள மனைகளைப் பத்திரப் பதிவு செய்வதைத் தடுக்கும் வகையில், பிப்ரவரி 2009–ல் கொண்டுவரப்பட்ட சட்டத் திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நிலையில் உள்ளது. பத்திரப் பதிவினைத் தடுத்தால் மட்டுமே அனுமதியற்ற மனைப் பிரிவுகளின் பெருக்கத்தைத் தடுக்க இயலும் என்பதால், அச்சட்டத் திருத்தத்தைச் செயல்பாட்டிற்குக் கொண்டுவருவது குறித்த மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், 4–12–2012 அன்று நடைபெற்ற கூட்டத்தில், மாண்புமிகு வருமான வரி மற்றும் பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் அவர்களும் கலந்து கொண்டு இச்சட்டத் திருத்தத்தைச் செயல்பாட்டிற்குக் கொண்டு வருவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

(i) அனுமதியற்ற மனைப் பிரிவுகளை வரன்முறைப்படுத்துவது குறித்து ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் சேர்த்து பொதுவான வரன்முறை விதிகளைக் கொண்ட திட்டம் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ii) எதிர்காலத்தில் அனுமதியற்ற மனைப் பிரிவுகள் ஏற்படுவதை முற்றிலுமாக தவிர்க்கும் வகையில் பத்திரப் பதிவுச் சட்டத்

திருத்தத்தைச் செயல்பாட்டிற்குக் கொண்டுவருவது குறித்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் அங்கீகாரமற்ற குடியிருப்பு மனைப் பிரிவுகள் ஏராளமாக உள்ளன. அங்கு உள்ளாட்சி அமைப்புகள் சாலை வசதி, சாக்கடை வசதி, மின் விளக்கு வசதி, குடிநீர் வசதி, பொதுக் கழிப்பிட வசதி போன்ற அடிப்படை வசதிகளை செய்து தருவதில்லை. இதனால் பொதுமக்கள் பெரிதும் நெருக்கடிக்கு உள்ளாகிறார்கள். எனவே, மாநில அரசு ஒரு சிறப்பு ஆணையை வெளியிட்டு, அங்கீகாரமற்ற குடியிருப்பு மனைப் பிரிவுகள் முழுவதற்கும் அங்கீகாரம் வழங்கி, முறைப்படுத்துவதோடு, இனிமேல் அங்கீகாரமற்ற மனைப் பிரிவுகள் உருவாகாதவாறு நிரந்தர ஏற்பாடு செய்திடும் முறையில், பத்திரப் பதிவுச் சட்டத்தில் ஒரு பொருத்தமான திருத்தம் செய்வதன்மூலம் அங்கீகாரமற்ற மனைப் பிரிவுகள் உருவாவதைத் தடுக்க வேண்டுமென இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த விரிவான அறிக்கையிலே அது சொல்லப்பட்டிருந்தாலும்கூட, இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முறையில், அரசு நடவடிக்கை எடுக்குமேயானால், இம்மாதிரியான அங்கீகாரம் அளிக்கப்படாத குடியிருப்பு மனைகள் உருவாகாதவாறு அரசு பார்த்துக்கொள்ளலாம். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த சட்டத் திருத்தத்தினையும், இதுவரை அங்கீகாரம் அளிக்கப்படாத மனைப் பிரிவுகளை அங்கீகரிக்கக்கூடிய முறையிலும் நடவடிக்கையை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 12–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூன்று உறுப்பினர்களும் பேசி முடித்த பிறகு, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கீகாரம் அளிக்கப்படாத வீட்டுமனைகள் உருவாகுவதையும், சட்டதிட்டங்களுக்கு எதிராக அங்கீகாரம்

2013 ஏப்ரல் 10] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

அளிக்கப்படுவதையும் இந்த அரசு தடுக்க வேண்டும் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அனுமதி பெறாமல் வீடுகள் கட்டப்படுகின்றன. நகராட்சியிலோ, ஊராட்சியிலோ வீடுகள் கட்டப்படுகின்றபோது, அந்த வீடுகளைக் கட்டுகின்றவர்கள் அதற்கான plan–ஐக் காண்பித்து, அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும். அனுமதியைப்பெற்று வீடு கட்டுவதற்குதான் அனுமதிக்க வேண்டும். அவர்கள் விருப்பப்படி, அதிகாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, விளைநிலங்களிலெல்லாம்கூட வீடுகள் கட்டுகிறார்கள். வீடுகளைக் கட்டுகிறபோது infrastructure சரியாக இல்லை. அரசு வகுத்திருக்கிற விதிமுறையின்படிதான் வீடுகள் கட்டப்பட வேண்டும். அதை மீறுகிறவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வர வேண்டும் என்பதை நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். முறையான plan approval பெற்றிருந்தால்தான் வீடுகளைக் கட்ட வேண்டும். விதிமுறைகளைக் கடைப்பிடிக்கத் தவறியவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு, ஒரே மாதிரியான விதிமுறைகளைக் கொண்டுவர வேண்டும். எதிர்காலத்தில் பத்திரப் பதிவு சட்டத்தில், திருத்தம் கொண்டு வந்தால்தான் நல்ல மாற்றம் நிச்சயமாக ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அண்மைக்காலத்தில், புற்றீசல்போல் பெருகிவரக்கூடிய, ஒப்புதல் பெறாத வீட்டுமனைகளைத் தடை செய்வது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்திருக்கக்கூடிய விரிவான அறிக்கையைப் படித்தேன். எங்களுடைய கோரிக்கை என்னவென்றால், ஒப்புதல் அளிக்கப்படாத மனைகளுக்கு எந்த விதத்திலும் தொடர்ந்து அனுமதி அளிக்கக்கூடாது என்பதுதான். அண்மைக் காலமாக தமிழகத்தினுடைய மூலை முடுக்குகளிலெல்லாம் விவசாய நிலங்களை வீட்டுமனைகளாகப் போட்டுக்கொண்டு, பல்வேறு விளம்பரங்களைச் செய்கிறார்கள். வரைமுறைப்படி, ஒரு ஏக்கர் நிலம் என்று சொன்னால், அதில் 35 சதவிகிதம் இடம் பொதுப் பயன்பாட்டுக்கு விடப்பட வேண்டும். ஆனால், வரன்முறைகளைப் பின்பற்றாமல் மனைகளை விற்றுவிட்டு, ஓடிவிடுகிறார்கள்.

ஏற்கெனவே, ஈமு கோழி மோசடி, Fine Future மோசடி என்று இருப்பதைப்போல, இப்பொழுது இந்த நில விற்பனையிலும் மோசடிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இந்தியாவினுடைய நாகரிகம், உலக நாகரிகத்தைப் பற்றிப் பேசுகின்றபோது, மொஹன்சதாரோ, ஹரப்பா நாகரிகத்தைப் பற்றிப் பேசுகிறோம், சிந்து சமவெளி நாகரிகத்தைப் பற்றிப் பேசுகிறோம், அந்த நாகரிகத்தைப் பற்றிப் பேசுகின்றபோது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் க. கிருஷ்ணசாமி, கேள்வியைக் கேளுங்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நகரம் நேர்த்தியாக அமைக்கப்பட வேண்டும். அழகான, அகன்ற வீதிகள் இருக்க வேண்டும், ஏனென்று சொன்னால், வருங்காலத்தில் ஒரு நகரை விரிவுபடுத்துகின்றபோது, சாலை வசதி இருக்க வேண்டும்; கழிப்பறை வசதி இருக்க வேண்டும்; பூங்காக்கள் இருக்க வேண்டும்; பொது இடமும் இருக்க வேண்டும் என்ற எல்லா விதிமுறைகளும் அடங்கிய ஒரு மனைப் பிரிவாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, பெருநகர வளர்ச்சிக் குழுமத்தினுடைய அதிகார வரம்புக்குட்பட்டு, கிராமங்களாக இருந்தாலும், நகரங்களாக இருந்தாலும் அனுமதியைப்பெற்றுத்தான் வீட்டுமனைகள் விற்பனை செய்யப்பட வேண்டும். ஆனால், அண்மைக் காலத்தில் கிராமப்புறங்களில், அரசின் அனுமதியைப் பெறாமல், வீட்டுமனைகளை விற்பதற்கு, புற்றீசல்போல கிளம்பியிருக்கிறார்கள். இப்போது வைக்கப்பட்டுள்ள இந்த அறிக்கையிலே ஏற்கெனவே அனுமதியில்லாமல் வாங்கியிருக்கக்கூடிய மனைப் பிரிவுகளை முறைப்படுத்துவதற்கான கருத்துரு என்றுதான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கிறார்களே தவிர, எங்களுடைய ஆதங்கம், எங்களுடைய கேள்வியான, வேகமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்ற வீட்டுமனைகளை உடனடியாகத் தடை செய்வதற்கான நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்பதைப் பற்றிக் குறிப்பிடவில்லை.

பிற்பகல் 12–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

2013 ஏப்ரல் 10]

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 2012–2013–ல் எனது அறிவிப்பில்கூட இது வரைமுறைப்படுத்தப்படும், மீறி ஒப்புதல் பெறாத மனைப் பிரிவுகளுக்கு சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்திருந்தேன். இப்போது பத்திரப் பதிவுத் துறை, உள்ளாட்சி மற்றும் நகராட்சித் துறைகளோடு கலந்து பேசி, ஒரு முடிவு எட்டப்படவிருக்கிறது. நிச்சயமாக ஒப்புதல் பெறாத மனைப் பிரிவுகள்மீது நடவடிக்கை எடுக்கப்படும். வரைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய ஆயத்த வேலைகள் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைப் பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவ்வளவுதான், உட்காருங்கள். அதற்கு மேல் விவாதம் இல்லை. (குறுக்கீடு) இல்லை, அதற்கு மேலே விவாதம் இல்லை. (குறுக்கீடு) விதியிலே இடமில்லை. டாக்டர், விதியிலே இடமில்லை. (குறுக்கீடு) ஒரு கேள்வியோடு முடிந்துவிட்டது. அவ்வளவுதான், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், விதியிலே இடமில்லை.*

6. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 54–வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 15–சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)

—

(அ) கோரிக்கை எண் 54–வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2013–2014 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 54–வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை). மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*